2026 ஜூலை மாதம் 08– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 124/2024

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW12 (LW18) – Dr.சுஷ்மிதாஸ்ரீ |
| தகப்பனார் பெயர்: | நேரு |
| ஊர்: | சிவகங்கை |
| வட்டம்: | சிவகங்கை |
| மாவட்டம்: | சிவகங்கை |
| தொழில்: | உதவி பேராசிரியர், சிவகங்கை அரசு மருத்துவமனை |
| வயது : | 31 |

08.07.2026

(1, 2 எதிரிகள் ஆஜர். 3வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசார் திரு.ரவிக்குமார், தலைமை காவலர், எண்.267 அவர்களால் அடையாளம் காணப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசு கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.10.2023ம் தேதி 11.15 மணிக்கு போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றியபோது, கருப்பணன் மகன் முருகேசன்

என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரை சதீஷ் என்பவர் அழைத்து வந்தார். அவரை இரண்டு தெரிந்த நபர்கள் 16.10.2023ம் தேதி காலை 10.45 மணிக்கு போடிநாயக்கனூர் ராஜ் பெட்ரோல் பல்க் அருகில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது, அவர் சுயநினைவுடன் இருந்தார், அவரது பரிசோதித்தப்போது

(i). வலது தோள்பட்டையில் ஒரு வெட்டுக்காயம் 6 x 4 x 4 செ.மீ வெட்டுக்காயம் இருந்தது.

(ii). வலது கை கட்டைவிரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் நடுவில் 5 x 3 x 2 செ.மீ அளவிலான ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

2. காயத்தின் அளவு அதிகமாக இருந்ததால் காயம்பட்ட நபரை மேற்சிகிச்சைக்காக தேனி, க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் மருத்துவ பதிவேடு நான் கொடுத்தது தான். அது **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேல்சிகிச்சை பெற்று க.விலக்கு அரசு மருத்துவமனையில் காயம்பட்ட நபர் போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனைக்கு வந்தார், அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் விபரத்தை பார்த்து அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என்று காயச்சான்றிதழ் வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் காயச்சான்றிதழ் நான் கொடுத்தது தான். அது **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 அரிவாளால் மேற்படி காயம்பட்ட நபருக்கு காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

3. அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். பெயர்கள் கூறவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு முதல்சிகிச்சை மட்டும் தான் வழங்கியுள்ளேன் என்றாலும், மேற்சிகிச்சைக்காக க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான்.

சம்பவம் ராஜ் பெட்ரோல் பல்க் அருகில் உள்ள பர்னிச்சர் கடையில் நடந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் கடையில் என்று மட்டும் கூறியுள்ளேன்.

4. மேற்படி கடை பர்னிச்சர் கடை பீரோ, இரும்பு பொருட்கள் இருப்பதால் காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் கடை என்று தெரியும், எந்த கடை என்று தெரியாது. சா.பொ.1 அரிவாளை காண்பித்து ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. சா.பொ.1 அரிவாளால் வெட்டியிருந்தால் மிகப்பெரிய காயம் ஏற்பட்டிருக்கும் என்றாலும், காயம்பட்டவருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டுள்ளதால் சா.பொ.1 அரிவாளால் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 08.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.08 18:18:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
08.07.2026